**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்**: 528 **நாள்**: 01.10.2026

**கோடம்பாக்கம் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இணை ஆணையாளர் (பணிகள்) திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, மழைநீர் வடிகால்கள், வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாருதல், கால்வாய்கள் மேம்பாடு மற்றும் தூர்வாருதல், நீர்நிலைகளில் படர்ந்துள்ள ஆகாயத்தாமரை மற்றும் கழிவுகளை அகற்றுதல் உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, இணை ஆணையாளர் (பணிகள்) திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள், இன்று (01.10.2026) கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-133க்குட்பட்ட தியாகராயநகர் துரைசாமி சுரங்கப்பாதையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், மேற்கு மாம்பலம், புஷ்பவதியம்மாள் லேன் பகுதியில் உள்ள மழைநீர்வடிகால்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள தூர்வாரும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், தியாகராயநகர் ராமன் தெருவில் டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையாக கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுவதையும், அதற்கான இயந்திரங்களின் செயல்பாடுகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், இ.ஆ.ப., அவர்கள், பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட திலக் தெருவில் மேற்கொள்ளப்பட்டு வரும் டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளையும், பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட சோழிங்கநல்லூர் உயிரி எரிவாயு நிலையத்தினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுகளின் போது, மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**